# பரீட்சகரின் அறிக்கை

**திறமை (திறன்) கப்ஸ்ரோன் பரீட்சை – 2020 சனவரி**

## (SS2) தகவல் தொழினுட்பவியல் திறன்கள்

இவ்வினாப்பத்திரத்தின் பிரதான நோக்கம், தகவல் தொழினுட்பவியல் மற்றும் திறன்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியானதுமான அறிவைப் பரீட்சிப்பதாகும். அலுவலகச் சூழலொன்றில் IT செயலிகளைப் எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய செய்முறை அறிவைக் கொண்டிருப்பது, இவ்வினாப்பத்திரத்திற்கு வெற்றிகரமாக விடையளிக்க உதவிபுரியும். இது உலகில் விரைவாக விருத்தியடைந்து வரும் ஒரு பாடமாக இருப்பதுடன் இந்த வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும் நோக்கில் இதனைக் கற்பதானது தகவல் தொழினுட்பவியல் பரப்புகளில் புதிய எண்ணக்கருக்களை / மேம்படுத்தல்களை இற்றைப்படுத்தும்.

### பகுதி A

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா இல. 01

இவ்வினா முழுமையான IT மற்றும் திறன்கள் பாடத்திட்டத்தை சுருக்கமான முறையில் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகளால் மொத்தமான 40 புள்ளிகளில் சராசரி அளவிலான புள்ளிகளை பெறக்கூடியதாக இருந்தது. ஆனால், மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் MS Access, Ms Excel, MS PowerPoint ஆகியவற்றுடன் தொடர்புடைய வினாக்களுக்குச் சரியாக விடையளித்திருக்கவில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் IT சூழலில் காணப்படும் சட்ட மற்றும் ஒழுக்கநெறி பற்றிய விடயங்களில் போதிய அறிவைக் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

### <u>பகுதி B</u>

ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுதல் வேண்டும்.
(மொத்தம் 60 புள்ளிகள்)

### வினா இல. 02

இவ்வினா தரவுத்தள முகாமைத்துவ முறை மற்றும் மைக்ரோசொப்ற் அக்ஸஸ் ஆகியன பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர்.

**<u>பகுதி (a)</u>**

இப்பகுதி தரவுத்தள முகாமைத்துவ முறைமையின் அனுகூலங்கள் பற்றிப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையினை எழுதி முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் அனுகூலங்களுக்குப் பதிலாக DBMS இன் பண்பியல்புகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (b)**

இப்பகுதி, தரப்பட்ட MS Access இன் கூறுகளின் நோக்கங்கள் பற்றிப் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் Tables, Forms, Reports ஆகிய முதல் மூன்று பகுதிகளுக்கும் சரியான விடை எழுதியிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் Queries, Macros ஆகியவற்றின் நோக்கங்களைச் சரியாகக் குறிப்பிட்டிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 03

இவ்வினா, தேவையான தகவல்களைப் பிரித்தெடுப்பதற்குப் பொருத்தமான சார்பு / சூத்திரத்தை எழுதுவதன் மூலம் விரிதாள் செயலி பற்றிய அறிவைப் பரீட்சிப்பதை நோக்காகக் கொண்டிருந்தது. பரீட்சார்த்திகளின் செய்முறை அனுபவம் பரீட்சிக்கப்பட்டதன் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர்.

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** மற்றும் **(d)** ஆகியவற்றுக்குச் சரியான சூத்திரங்களை எழுதிப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (a), (c), (e)** ஆகியவற்றுக்கு விடையெழுதாமல் விட்டிருந்தனர் அல்லது தவறான விடைகளை எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருக்கவில்லை.**

## வினா இல. 04

இவ்வினா அலுவலகச் சூழலில் மின்னஞ்சலைப் பயன்படுத்துவதில் பரீட்சார்த்திகளுக்குள்ள ஆற்றலைப் பரீட்சித்தது. தெரிவுசெய்து விடையளிக்கின்ற வினாக்களில் பெரும்பாலானவர்களால் முன்னுரிமையளிக்கப்பட்ட வினா இதுவாகும். பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவைத் தெரிவுசெய்து விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டதைப்போல Anne இற்கு காபன் பிரதியொன்றை (CC) அனுப்புவதற்குத் தவறியிருந்தனர்.

மேலும், சில மாணவர்களால் இணைப்பினைக் குறிப்பிட இயலவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 05

இவ்வினா, தகவல் முறைமைகளுடன் தொடர்புடைய முறைமைக் கட்டுப்பாடுகள் மற்றும் பௌதிகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவைத் தெரிவு செய்திருந்தனர்.

**பகுதி (a)** ஆனது சமூக ஊடகக் கணக்குகள் சட்டவிரோதமாக அணுகப்படுவதிலிருந்து பாதுகாப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எழுதுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை எழுதி முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (b)** ஆனது தகவல் முறைமையைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் பௌதிகக் கட்டுப்பாடுகள் பற்றிக் கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் சரியான விடைகள் வழங்கப்பட்டு முழுப் புள்ளிகளும் பெறப்பட்டிருந்தன.

**பகுதி (c)** ஆனது இணையத்தை அணுகுவதன் (பயன்படுத்துவதன்) காரணமாக தெரியாத malware இனால் கணினிகள் தாக்கப்படுகிறதா என்பதை நியாயப்படுத்துமாறு கேட்டிருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இதனை பகுப்பாய்வு ரீதியாக நியாயப்படுத்தியிருந்தனர்.

**பகுதி (d)** ஆனது பாடப்புத்தகத்திலிருந்து நேரடியாகக் கேட்கப்பட்டிருந்த வினாவாகும். ஆனால், ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியாக விடையளித்திருந்தனர். இது, பெரும்பாலான பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தைப் படிக்கவில்லை என்பதையே காட்டுகிறது..

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 06

இவ்வினா மைக்ரோசொப்ற் வேட் தொடர்பான சொல்நிரற்படுத்தல் மென்பொருள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர்.

**பகுதி (a)** ஆனது மைக்ரோசொப்ற் வேட் இலுள்ள தரப்பட்ட அம்சங்களால் ஆற்றப்படும் பணிகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால், உப பிரிவுகள் (i) print preview, (iii) auto text and (vi) superscript ஆகியவற்றுக்குச் சரியாக விடையளிக்க முடிந்திருந்தது. எவ்வாறாயினும் மிகச் சில பரீட்சார்த்திகளுக்கு track changes, restrict editing, navigation pane ஆகியவற்றை விபரிப்பதற்கு முடிந்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் போதியளவான செய்முறை அறிவு காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

**பகுதி (b)** ஆனது தரப்பட்ட கூற்றுடன் இணங்குகிறீர்களா, இல்லையா என்பதைக் குறிப்பிட்டு, அதனை நியாயப்படுத்துமாறு கேட்டிருந்தது. அதாவது ‘‘மைக்ரோசொப்ற் வேட் ஆவணமொன்றிலுள்ள சொற்கள் மற்றும் எழுத்துக்களின் எண்ணிக்கையை இலகுவாகக் கண்டுபிடிக்க முடியும்’’. இது ஒரு செய்முறை வினாவாகும். எவ்வாறாயினும், மிகச் சில பரீட்சார்த்திகளாலேயே சரியான விடை அளிக்கப்பட்டிருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 07

இவ்வினா, மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் உடன் தொடர்புடைய முன்வைப்பு மென்பொருள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர்.

**பகுதி (a)** ஆனது மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் இலுள்ள தரப்பட்ட அம்சங்களால் ஆற்றப்படும் பணிகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் உபபகுதிகள் (i) slide template, (iii) slide transitions, (iv) side animations ஆகியவற்றுக்குச் சரியாக விடையளிக்க முடிந்திருந்தது. எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் clipboard, slide size, slide library ஆகியவை பற்றி விபரித்திருக்கவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் பற்றிய போதியளவு செய்முறை அறிவு காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

**பகுதி (b)** ஆனது ஒரு நடைமுறை வினாவாக இருப்பதுடன் தரப்பட்ட சிறிய விவரணத்திற்கான தீர்வொன்றை விபரிப்பது இங்கு எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் முறையான தீர்வை வழங்கி முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

\- - - -

**<u>செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்கான உதவிக் குறிப்புகள்:</u>**

1. முழுப் பாடத்திட்டத்தையும் ஆழமாகப் படிக்கவும்.

2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

3. தகவல் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய பாடப்புத்தகங்கள், நூல்கள் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனையவற்றை வாசிக்கவும்.

4. விடைகளை எழுதும்போது தேவையாயின் உதாரணங்களை வழங்கி, ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தகவல் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியானதுமான அறிவை சமர்ப்பிப்பது முக்கியமானதாகும்.

5. கையெழுத்து விளங்கக்கூடியதாக இருப்பதையும் விடைகளுக்கு இலக்கமிடப்பட்டிருப்பதையும் உரிய முறையில் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

6. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

7. உமது அறிவை மேம்படுத்திக்கொள்வதற்காக கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளை ஆராய்ந்து பார்க்கவும்.

8. நேரத்தை வினைத்திறனான வகையில் பயன்படுத்த பயிற்சி செய்யவும்.

9. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், விடைகள் சரியாக இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதை இருமுறை பரீட்சிக்கவும்.

10. நல்ல தயார்படுத்தலுடனும் சித்தியடைதல் என்னும் நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.

- * * * -